தலைவர், உள்ளாட்சித் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சரியான முறையிலே வழிமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

215—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

*43688 **திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனை வட்டம், ஆர்.எஸ். மங்கலத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை சட்டமன்றத் தொகுதி, திருவாடனை, ஆர்.எஸ். மங்கலத்தில் புதிதாக அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குகிற கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள பேரணாம்பட்டு வட்டத்தில், ஒரு பெண்கள்*

கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படுமா? இங்கு கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்கு எந்தவித வசதியும் இல்லை. எனவே, ஒரு பெண்கள் கல்லூரியாவது அமைக்கப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு உரியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். பொதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், இதுவரையில் இல்லாத அளவிற்கு, தமிழக அரசின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு மொத்தம் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்து மாணவர்கள் பயன்பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், அதற்குத் தேவையான கட்டட அமைப்புகளையும் உருவாக்கிக் கொடுத்து, இன்றைக்கு கல்லூரிகளிலே மாணவர்கள் நல்லமுறையிலே படித்து வருகிறார்கள். எந்தத் தொகுதி என்று பார்க்காமல், தொலைதூரம் இருக்கக்கூடிய இடங்களில், எந்தெந்தப் பகுதிகளில் வேண்டுமோ அந்தந்த இடங்களிலெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரிய நேரத்தில் கல்லூரிகளை அமைத்துக் கொடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசு மீனாட்சி கல்லூரியில் நீண்ட நெடிய காலமாக Auditorium வேண்டுமென வலியுறுத்தி வந்தார்கள். எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30 இலட்சம் ரூபாய் செலவில் Auditorium கட்டப்பட்டு, அது இப்பொழுது பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அதேநேரத்தில் அங்கு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வரக்கூடிய

2015 செப்டம்பர் 3]

காரணத்தினால் கூடுதல் கட்டடம் வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. அதற்கான இட வசதியும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் Auditorium வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு, அது அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயே கட்டப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றது. மேலும், அங்கு புதிய பாடப் பிரிவுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், தற்போதைய சூழ்நிலையில் மாணவ, மாணவியரிடம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய ஆர்வம் அதிகமாக இருப்பதாலும், தற்போது கூடுதலாகக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. இதுவரையில் இல்லாத அளவிற்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 956 புதிய பாடப் பிரிவுகளை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

(முற்பகல் 10-25

அந்த வகையில் புதிய, புதிய பாடத் திட்டங்களை உருவாக்கியதன் காரணமாக, இதுவரையில் 1,250 பேர் கூடுதலாக உதவிப் பேராசிரியர்களாகப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அந்த வகையிலே, எந்தெந்தக் கல்லூரிகளுக்கு புதிய பாடப் பிரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் கல்லூரிகளையெல்லாம் ஆய்வு செய்து, அந்த நிருவாகத்தின்மூலம் அனுமதியைப் பெற்று மாணவர்களுக்குத் தேவையான புதிய கட்டட வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகிற ஒரு மாவட்டம். பள்ளிகள், கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் என அனைத்து கல்வி நிறுவனங்களையும் ஒருங்கே பெற்றிருக்கிற ஒரு மாவட்டம். இவை அனைத்தையும் பெற்று கோவை மாவட்டம் வளர்ச்சி பெற்றிருந்தாலும்கூட, இந்தக் கல்வி நிலையங்கள் அனைத்தும் கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலேயே இருக்கின்றன.

எனது மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் அடிவாரத்தில் இருக்கின்றது. அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்கள் 50-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களிலே வசித்து வருகிறார்கள். மேலும், நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களெல்லாம் உயர் கல்வி படிக்க கோவைக்குச் செல்கின்றார்கள். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மேட்டுப்பாளையம் தொகுதியை மையமாக வைத்து, அங்கே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது சம்பந்தப்பட்டது ஆகும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதிகளுக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்து தற்போது விவாதம் track மாறி போய்க் கொண்டிருக்கிறது. இருந்தாலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் இல்லாத அளவிற்கு 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்து, மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில், 11 கல்லூரிகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

2015 செப்டம்பர் 3]

மேட்டுப்பாளையத்திற்கு அருகில் இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற வேண்டும் என்று சொன்னால், கோவை மாநகருக்குச் சென்று படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார். மேட்டுப்பாளையம் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வி பெறுவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம்

*32873—**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சலில் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குளச்சல் தொகுதி, குளச்சலில் அரசாணை நிலை எண் 42, வணிக வரி மற்றும் பதிவுத் (யு2) துறை, நாள் 12-3-2015-ல் குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*